# ரூத்தின் சரித்திரம் ஒரு பார்வை

***முனைவர் ஜே.ரா. ஹேனா வில்வி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
போப் கல்லூரி, சாயர்புரம்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7889

***ஆய்வுச்சுருக்கம்***

*ஒரு பெண்ணானவள் சமுகத்தில் எப்படிவாழ வேண்டும் என்பதை வெளிக் கொணரும் வகையில் ரூத்தின் சரித்திரம் ஆய்வுக்களமாக எடுக்கப்பட்டுள்ளது. ரூத் என்பவள் ஒரு பெண். அவள் தன்னுடைய வாழ்வில் நடந்த துயரச் சம்பவங்களை மறந்து தன் வாழ்க்கைப் படிநிலைகளை எப்படித் தொடர்ந்தாள், அவளுடைய வாழ்க்கை முன்னிலைமையைக்காட்டிலும் பின்னிலைமை நன்மைக் கேதுவாய் அமைந்ததா அல்லது தீமைக் கேதுவாய் அமைந்ததா என்பதை சமூகம் அறிந்து செயல்பட இக்கட்டுரை ஏதுவாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.*

## பரிசுத்த தோகமப் பகுப்பு

பரிசுத்த வேதாகமம் கிறித்தவர்களின் புனித நூலாக மதிக்கப்படுகிறது. அவ்வேதப் புத்தகமானது பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலால் அருளப்பட்டது. பரிசுத்த வேதாகமம் 66 புத்தகங்களை தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது. அதற்கொரு வரலாறும் உண்டு. அதனை பொது வாக இருபெரும் பிரிவுகளாகப் பிரிப்பர்.

1. பழைய ஏற்பாடு- 39
2. புதிய ஏற்பாடு- 27

## பழைய ஏற்பாடு

*ஆகமப் புத்தகங்கள் - 5*
*சரித்திரப் புத்தகங்கள் - 12*
*இலக்கியப் புத்தகங்கள் - 5*
*பெரியத் தீர்க்கத் தரிசனப் புத்தகங்கள் - 5*
*சிறியத் தீர்க்கத் தரிசனப் புத்தகங்கள் - 12*

## புதிய ஏற்பாடு

*சுவிஷேசங்கள் - 4*
*வரலாறு- 1*
*நிருபங்கள் - 21*
*ஆவியானவரின் வெளிப்படுத்தல்- 1*

இவ்வாறாக பரிசுத்த வேதாகமமானது பல புத்தகங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

**சரித்திரம்**

சரித்திரம் என்பது வடமொழி சொல்லாகும். தமிழில் வரலாறு என்று சொல்லலாம். ஒருவரின் வாழ்க்கை வரலாறினை அறிந்து கொள்ள வழி வகை செய்வதாகும்.

**"நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்**
**ஆனால்**
**இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்[1]**

என்றார் டாக்டர் அப்துல்கலாம்.

***தடைகளைத்தாண்டி***
***விடைகளைத் தேடுவோம்!***
***தடைகளேஇல்லாமல்கிடைக்கும்***
***விடைகள் வெற்றி மட்டுமே! - பெரும்***
***தடைகளைத்தாண்டி கிடைக்கும்***
***விடைகள்தான் வெற்றிச் சரித்திரம்***
***தடைகளைத் தாண்டுவோம்!***
***விடைகளைத் தேடுவோம்!***
***சரித்திரம் படைப்போம்.[3]***

**சேந்தனமுதன் (இணையம்)**

**ருத் கதைச்சுருக்கம்**

யுதாவிலுள்ள பெத்லகேம் ஊரிலே எலிமலேக்கு - நகோமி தம்பதியினர்வ சித்து வந்தனர். அவர்களுக்கு இரு ஆண் பிள்ளைகள். தேசத்தில் பஞ்சம் தலைத் தூக்கியது. எலிமலேக்கு தன் குடும்பத்தை மோவாப் தேசத்துக்கு அழைத்துச் சென்றான். அங்கு கொஞ்ச காலம் வாழ்ந்திருந்து எலிமலேக்கு இயற்கை எய்தினான். அதன் பிறகு நகோமி மோவாபிய பெண்களை தனது மகன்களுக்கு பெண் கொண்டாள். பத்து வருடங்களுக்குப் பிறகு இரண்டு மகன்களையும் இழந்தாள். உடனே தனது மருமகள்கள் இருவரையும் அழைத்து நீங்கள் உங்கள் தகப்பனிடத்திற்குப் போங்கள்ளது என்கிறாள். இருவருள் ஒருத்தியான ஒருபாள் கிளம்பிகிறாள் மற்றவளான ரூத் மறுத்துவிடுகிறாள். அவளுடனே இருப்பதாக வாக்களிக்கிறாள். இருவரும் மீண்டும் சொந்த ஊராகிய பெத்லகேமுக்கு வருகைப் புரிகின்றனர். அன்றாடப் பசியினைப் போக்குவதற்காக அருகிலுள்ள வயலில் நெல்பொறுக்க செல்கிறாள். அந்த வயல்வெளி போவாஸ் என்பவனுடையது. அப்போவாஸ் அக்குடம் பத்தார்க்கு நெருங்கின உறவின் முறையானாவான். போவாஸ் ரூத்தை யாரென்று தனது கண்காணியிடத்தில் விசாரிக்கிறான். யாரென்று அறிந்துக் கொண்டு உதவிச் செய்ய முன்வருகிறான். நகோமி தனது மருமகளுக்கு சில அறிவுரைகளை வழங்குகிறாள். அதின்படி நடக்கிறாள் ரூத். நகோமிக்கு நெருங்கின உறவின் முறையான் இன்னொருவன் இருக்கிறான். போவாஸ் அவனிடம் ஒப்புதல் கேட்டு ரூத்தை மணக்கிறான். பிள்ளைகள் பல பெற்று சந்தோஷமாக வாழ்க்கையை வாழத் தொடங்கினர். ரூத்தின் வம்சத்தில் பிறந்தவர்தாம் இறைமகனாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. என்னும் பெரும் பேறினைப் பெறும் பாக்கியம் பெற்றாள்.

**புகுந்தக உறவு**

சமூகத்தில் குடும்பம் என்றவுடன் தனிக்குடும்பம் கூட்டுக்குடும்பம் என இரண்டு பிரிவுகள் இருப்பது போல் ஒரு பெண்ணானவளுக்கு பிறந்தகம் புகுந்தகம் என்ற இரண்டு அகங்கள் உள்ளன. புகுந்தகம் பெற்றோருடன் திருமணத்திற்கு முன் வரை வசிக்கும் காலம் ஆகும். புகுந்தகம் என்பது திருமணம் முடிந்து கணவனாருடன் இணைந்து கணவனுடைய இல்லத்தில் வசிப்பதாகும். பெண்ணானவள் பிறந்தகத்தைக் காட்டிலும் புகந்தகத்தில் தான் தனது வாழ்நாளில் அதிக நாட்களைச் செலவு செய்கிறாள். அந்நாட்களில் அவள் வாழும் வாழ்க்கை தான் சரித்திரமாகிறது. ரூத் என்னும் பெண்மணி யுதக் கோத்திரத்தாளல்ல. மோவாபியப் பெண்ணாவாள். ஆனாலும் தனது மாமியாரோடு அவள் கொண்ட ஐக்கியம் போற்றுதற்குரியது. கணவனை இழந்தப்பிற்பாடும் தனது மாமியாரோடு ஒன்றித்துச் சென்றாள்.

"ஆதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம்: நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன் நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன். உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்: உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.

நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்: மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னைப் பிரித்தால் கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக் கடவர் என்றாள்.[4]

அவள் தன்னோடே கூட வர மன உறுதியாயிருக்கிறதைக்கண்டு, அப்புறம் தைக் குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை.

மாமியார் - மருமகள் உறவு அன்புறவாக அமைந்துள்ளதுள்ளதைக்காண முடிகிறது. தற்காலத்தில் மாமியார் மருமகள் உறவு கேள்விக்குரியாகியுள்ளது. மாமியார் - மருமகளிடம் காட்டவேண்டிய அன்புறவானது பகையாக வெளிப்படுகிறது. அதற்கு காரணம் மகனின் அன்பைப் பங்கு போட வந்துவிட்டாள் என்பதாகும். அதனால்தான் மாமியார் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தாள் பொன்குடம் என்பது இங்கு நினைவுக் கூரத்தக்கது. பிறந்தகம் விட்டு புகுந்தகம் வந்திருக்கும் மகளை மருமகளாகப் பார்க்காமல் மகளாக பாவிக்க வேண்டும். தன் இல்லந்தேடிவந்த மருமகளை மகளாக நகோமி எண்ணியதால் ரூத் அவளைதன்னந் தனியே விட்டுச் செல்ல வீரும்பவில்லை. அவளுடன் செல்ல முனைகிறாள். நகோமி - ரூத் உறவு அன்புறவாக உலகோர் போற்றும் உன்னத உறவாக அமைந்துள்ளது சமூகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது.

**உறவின் மேன்மை**

நகோமி - ரூத் சொந்தத்தை இழந்து மீண்டும் தனது சொந்த ஊருக்கு திரும்புகின்றனர். உறவின் முறையார் வந்து அவர்களை விசாரிக்கின்றனர். இருவரும் ஓர் இல்லத்தில் வசிக்கின்றனர். நகோமிக்கு அவளது கணவனான எலிமலேக்கின் உறவின் முறையான் ஒருவன் இருந்தான். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளாயிருந்தான். அவனுடைய வயல்வெளியில் கதிர் பொறுக்குபவர்கள கீழே விடும் கதிர்களை பொறுக்கி வருவதை வழக்கமாக்கிக் கொண்டாள் ரூத். அதுஅவர்கள் இருவருக்கும் போது மானபடியிருக்கும். ஒரு நாள் அவள் பொறுக்கிக் கொண்டிருப்பதைக் கண்டு அவளைக் குறித்து விசாரிக்கிறான். அவள் தனது உறவின் முறையானின் மருமகள் என்பதை அறிந்து அவளிடம் சென்று அறுவடை முடியும் வரை தினமும் என் வயலில் வந்து கதிர் பொறுக்கிக்கொள் வேறெங்கும் செல்ல வேண்டாம் என கூற ரூத்தும் சம்மதம் தெரிவிக்கிறாள். தனது மாமியாரிடம் தெரிவிக்கிறாள். அவர்களுக்கு போவாஸ் கண்களில் தயவு கிடைத்தது. மாமியாராகிய நகோமி ரூத்திடம் போவாஸ் குடித்து வெறித்திருக்கும் போது அவர்கண் எதிர்படாமல் அவர்படுக்கும் போது அவருடன் படுத்துக்கொள்ள சொல்கிறாள். மாமியார் கற்பித்த படியே ரூத் செய்தாள். போவாஸ் அவளிடம். இராத்திரிக்குத் தங்கியிரு நாளைக்கு அவன் உன்னைச் சுதந்தர முறையாய் விவாகம் பண்ணச் சம்மதித்தால் நல்லது அவன் விவாகம் பண்ணட்டும் அவன் உன்னை விவாகம் பண்ண மனதில்லாதிருந்தானேயாகில் நான் உன்னைச் சுதந்தர முறையாய் விவாகம் பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு ஆணையிடுகிறேன்: என்றான். 5

ரூத் அவன் சொன்னபடியே செய்தாள். மோவாபிய பெண்ணாக இருந்தாலும் பிற ஆண்களோடு செல்லாமல் தனது

மாமியாருக்கு அடங்கி நடந்ததால் அவளுடைய வாழ்க்கையிலே ஒரு திருப்பம் ஆரம்பமானது.

**சடங்கு முறை**

போவாஸ் ரூத்தைத் திருமணம் முடிக்க வேண்டுமானால்சமூகத்தின்படி சில சடங்கு முறைகளை கையாள வேண்டும். எலிமலேக் குக்கு நெருங்கிய உறவு முறையானான ஒருவன் இருந்தான் இவன் மணமுடி க்கவில்லையெனில் மாத்திரமே போவாஸ் மணமுடிக்க முடியும் ஆகவே அவனுடைய கருத்தினை அறிந்துக்கொள்ள பட்டணத்து மூப்பர்களை அழைத்து அமர்ந்திருந்தான். அங்கு வந்த அவனிடம் கேட்க அவன் சம்மதிக்கவில்லை அப்படியானால் அவன் தனது காலணிகளைக் கழற்றி போட வேண்டும். அதைவாங்கிக் கொள்ளும்

அப்படியே அந்தச் சுதந்தரவாளி போவாஸை நோக்கி நீர் அதைவாங்கிக் கொள்ளும் என்றுசொல்லி தன் பாதரட்சை யைக் கழற்றிப் போட்டான் 6

போவாஸ் ரூத்தை மணந்துக் கொண்டான். அவர்கள் சந்ததி பெருகலாயிற்று. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சந்ததியில் ரூத் இடம் பெற்றாள்.

**முடிவுரை**

ரூத்தின் சரித்திரம் நமக்குக் கற்றுத் தருவது என்னவென்றால் புகுந்தகத்தின் உறவின்முறையாரை தம் சொந்த உறவாகப் பாவித்து நடக்க வேண்டும். மூாமியார் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன்குடம் என்றல்லாது மாமியார் - மருமகள் உறவானது நல்லுறவாக அமைவது சிறப்பு. பெண்ணானவள் பிறந்தகம் மற்றும் புகுந்தக உறவின் மேன்மையை நிலை நாட்டுபவளாக வாழ்தல் வேண்டும்.

**அடிக்குறிப்புகள்**

1. இணையம்
2. இணையம்
3. இணையம்
4. ரூத் 1̇:16 -17
5. ரூத் 3:13
6. ரூத் 4:8